सत्यमेव जयते

**பயிலரங்க எண்ணிக்கை: 112** **நாள்: 05.01.2026**

## தமிழ்ச் செவ்விலக்கியங்களில் தமிழிசைக் கூறுகள்

## Tamil Music Elements in Tamil Classical Literature

### பயிலரங்கம் – 31

### ( 27.01.2026 - 02.02.2026)

### அறிவிப்பும் அழைப்பும்

தமிழிசை மிகத் தொன்மை வாய்ந்தது. குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி விளரி, தாரம் என்னும் ஏழிசையும், தோற்கருவி, துளைக் கருவி, நரம்புக் கருவி, கஞ்சக் கருவி என்னும் நால்வகைப்பட்ட இசைக் கருவிகளும் சங்க காலத்தில் வழக்கில் இருந்துள்ளன. குறிஞ்சிப்பண், மருதப்பண், காஞ்சிப்பண், செவ்வழிப்பண், படுமலைப் பண், விளரிப்பண் முதலான பண்களைப் பற்றியும், சீரியாழ், பேரியாழ், வேய்ங்குழல், ஆம்பற்குழல், முழவு, தண்ணுமை, பெருவங்கியம் உள்ளிட்ட இசைக்கருவிகள் குறித்தும், பாணர், பாடினி, விறலியர், கூத்தர் முதலான பல இசைக் கலைஞர்களைப் பற்றியும் தமிழ்ச் செவ்விலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இசையை அடிப்படையாகக் கொண்டு பாடற்கலையையும், ஆடற்கலையையும் பொழுதுபோக்காக மட்டுமன்றித் தொழிலாக அமைத்து வாழ்ந்ததனையும் இவ்விலக்கியங்கள் நன்குணர்த்துகின்றன.

தமிழிசையின் பழமையையும், புதுமையையும் ஆராய்ந்து அதன் தனித்தன்மையையும், நுட்பத்தினையும் வளர்ச்சி நிலையையும் பயிற்றுவிக்கும்

நோக்கில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் இப்பயிலரங்கை நடத்தத் திட்டமிட்டுள்ளது. பயிற்றுரை, செயல்முறைப் பயிற்சி (சங்க இலக்கியப் பாடல்களை இசையுடன் கற்பித்தல்) என்ற நிலைகளில் இப்பயிலரங்கம் நடைபெறும். துறைசார் அறிஞர்கள் பயிற்சி அளிக்க உள்ளனர்.

பல்கலைக் கழகம், கல்லூரிகளில் தமிழ்த் துறை, இசைத் துறையில் முனைவர் பட்ட ஆய்வு மேற்கொள்ளும் மாணவர்களை இப்பயிலரங்கில் பங்கேற்றுப் பயனடையுமாறு செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் அன்புடன் அழைக்கிறது.

**பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:**

- பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை – 30
- பயிலரங்கு நடைபெறும் நாட்கள்: **27.01.2026 முதல் 02.02.2026 வரை 7 நாட்கள்.**
- பயிலரங்கு நேரம்: **காலை 10.00 - 01.00 வரை, பிற்பகல் 02.00 - 05.00** வரை
- பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.
- பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படியும் நாட்படியும் செம்மொழி நிறுவன விதிமுறைகளின் படி வழங்கப்படும்.
- பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும் தேநீரும் வழங்கப்படும்.
- பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இணையவழியில் விண்ணப்பிக்க வேண்டும்.
- இணையவழி விண்ணப்பத்தை https://forms.gle/JJ6oGUL6HpKTEPsE8 என்ற இணைப்பின் வழியாகவோ அல்லது கீழ்வரும் விரைவுத் தகவல் குறியீடு (QR Code) மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

- ❖ நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள் 21.01.2026. காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டா.
- ❖ விண்ணப்பக் கட்டணம் ஏதுமில்லை.
- ❖ செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 22.01.2026 அன்று மின்னஞ்சல்/புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
- ❖ இப்பயிலரங்கில் பங்கேற்போர் 26 அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்குத் தாமதமாக வருதலைத் தவிர்த்தல் வேண்டும். தாமதமோ இடைநிற்றலோ இருப்பின் நாட்படியும் சான்றிதழும் வழங்கப்படமாட்டா.
- ❖ பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

**இயக்குநர்**